# 3 YEAR PLAN

## Jaffna division
## 2020-2022


R.SINDUYA & J.REBEKKA
Divisional secretariat
jaffna

# பொருளடக்கம்

| விபரம் | பக்க இலக்கம் |
| --- | --- |
| 1. அறிமுகம் | 02 - 05 |
| 2. குறிக்கோள் மற்றும் நோக்கங்கள் | 06 |
| 3. இலக்கு குழுக்கள் | 07 |
| 4. செயன்முறை | 07 - 09 |
| 5. **SWOT** | 10 - 15 |
| 6. முக்கியமான தந்திரோபாய வழிகள் | 16 - 18 |
| 7. கிராமிய முயற்சியாண்மை அபிவிருத்தி செய்தல் மூன்று வருடத் திட்டம் சுருக்கக் குறிப்பு | 19 - 20 |
| 8. பின்னிணைப்புக்கள் | 21 - 27 |

# கிராமிய முயற்சியாண்மையினை அபிவிருத்தி செய்வதற்கான மூன்றாண்டு திட்டம் (2020 – 2022)

## 1.அறிமுகம்

பொருளாதார வளர்ச்சி என்பது நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பாகும். சமூக பொருளாதார வளர்ச்சியுடன் சமூக நலவளர்ச்சியையும் உள்ளடக்கியதாகும். மொத்தத் தேசிய உற்பத்தியில் விவசாயத்துறை, கைத்தொழில்துறை, சேவைத்துறை என்பன முக்கிய பங்காற்றுகின்றன. வருமானப் பங்கீட்டின் சமமின்மையால் வறுமை நிலை அதிகரிப்பதோடு ஏனைய துறைகளின் வளர்ச்சியும் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

2018 படி இலங்கை **4.5%** சதவீத பொருளாதார வளர்ச்சியை அடையும் என இலங்கை மத்திய வங்கி எதிர்பார்ப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் **3.2%** பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இதில் விவசாயத்துறையின் பங்கு அதிகரிப்பு ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் **0.1%** வளர்ச்சிஅதிகரிப்பே காணப்பட்டது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி **9,644,728** உயர்வாக பதிவாகியுள்ளது. நெல் உற்பத்தி, மற்றும் இதர உற்பத்திகள் அதிகரிப்பு ஓர் காரணமாக அமைகின்றது.

கைத்தொழில் துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் **0.9%** சதவீதவளர்ச்சியுடன் **27%** பங்களிப்பை வழங்கியுள்ளது. இதில் உற்பத்தி துறையானது கடந்த வருடத்துடன் **3%** உயர்வடைந்துள்ளது. ஆனால் நாட்டிற்கு முக்கிய பங்களிப்பை வழங்கும் சேவைத்துறை **56.8%** சதவீத வளர்ச்சியைக் கொண்டுள்ளது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்க வேண்டுமாயின். இம் மூன்று துறைகளும் வளர்ச்சியடைய வேண்டும். நாட்டின் வேலைவாய்ப்பை, முதலீடுகளை அதிகரித்தல், உற்பத்தி செயற்பாடுகளை, ஏற்றுமதிகளை அதிகரிப்பதன் ஊடாக பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க முடியும்.

வருமான மட்டத்தை எடுத்துக் கொள்வோமாயின் இலங்கையில் தனிநபர் வருமானம் **4000** அமெரிக்க டொலர் மட்டத்திலேயே இருந்து வருகின்றது. இது 2018ல் மொத்தத் தேசிய உற்பத்தியில் **4102** அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது. இவை அதிகரிக்க வேண்டுமெனின் உள்நாட்டு உற்பத்தியின் மீது கவனம் செலுத்தி அவற்றின் மூலம் பொருளாதார இலக்கை அடைதல் வேண்டும்.

மற்றும் இலங்கை வறுமையினை எடுத்துக் கொள்வோமாயின் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களின் எண்ணிக்கை **4.1%** மாக காணப்படுகின்றது. இதில் வடகிழக்கு மாகாண வறுமை வீதம் கூடுதலாகக் காணப்படுகின்றது. ஆகவே வடக்கு மாகாணத்தில் எமது யாழ்

பிரதேச மக்களின் வறுமையை குறைக்க வேண்டுமாயின் வருமான சமமின்மை, ஏற்றத்தாழ்வுகளை மாற்றியமைப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை அடையலாம். இலங்கையைப் பொறுத்தவரையில் வேலையின்மை வீதம் **4.4%** ஆக காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் **10.7%** வீதமாக காணப்படுகின்றது.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு வடக்கு, கிழக்கு பிரதேச மக்களுக்கு புதியதொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதுடன் பலதொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம், வேலையின்மையைக் குறைத்து பொருளாதார வளர்ச்சியை அடையலாம்.

எமது வடமாகாணத்தை பொறுத்தவரையில் நடுத்தர, சிறிய பொருளாதார ரீதியாக நலிவடைந்து காணப்பட்டிருக்கும் கைத்தொழில் மற்றும் வர்த்தக முதலீடுகளை ஊக்குவித்தல் வேண்டும். கைத்தொழில், வர்த்தகதொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறியும் நோக்கிலான சந்திப்புக்களை மேற்கொள்ளவேண்டும்.

ஆகவே யாழ்ப்பாணப் பிரதேச சபையைப் பொறுத்த வரையில் சிறிய மற்றும், நடுத்தர பாரிய கைத்தொழில்கள் எத்தகைய பங்களிப்பை கொண்டுள்ளன எனவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது எனவும் அவை எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆய்வு செய்வதாகவும் இவ்வாய்ப்பு காணப்பகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் விவசாயத்துறையில் சிறிய வீழ்ச்சியே காணப்பட்டாலும் கைத்தொழில் துறையின் வளர்ச்சி சார்பளவில் அதிகமாகக் காணப்படுகின்றது. இவற்றிற்கான காரணமாக வேலையின்மை, வறுமை, தங்கிவாழ்வோர் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. ஏனெனில் வேலையின்மை மூலம் இளம் வயதினரிடையே விரக்தி, சமூகவிரோதச் செயல்கள், வன்செயல்கள், இளமையிலே வறுமையினை அனுபவித்தல் என்பவற்றால் சேமிப்பு முதலீடு குறைந்து மொத்த உற்பத்தி வீழ்ச்சி அடைகின்றது. ஆகவே நாட்டுமக்களின் வருமான ஏற்றத் தாழ்வுகளை நீக்கி வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் வருமானச் சமமின்மையைக் குறைத்து, மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டு மிதமான வளர்ச்சி பெற்றுள்ளது. 2018இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி **52%** ஆகக் காணப்படுகின்றது. மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் **45%** ஆக காணப்படுகின்றது. இதில் ஏற்றுமதியின் பங்கு **5-6%** ஆகக் காணப்படுகின்றது.

நாட்டின் கிராமிய மட்டங்களில் சிறுதொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்வதன் மூலமே இதனைப் பெற்றுக் கொள்ளலாம். சிறுதொழில் முயற்சியை அபிவிருத்தி செய்வதனால் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற முடிவதோடு வருமான ஏற்றத் தாழ்வுகளை மீள் பங்கீடு செய்ய முடியும். இதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து மொத்தத் தேசிய உற்பத்தி மூலம் பொருளாதார வளர்ச்சியை அடையலாம். கிராமிய முயற்சியாண்மை மூன்று

வருடத் திட்டத்திற்கு அமைய சிறுகைத் தொழிலாளர்களை இனங்காண்பது அவசியமாகும். அத்துடன் அவர்களது தேவைகளை இனம் கண்டு பிரதேச செயலகத்தின் ஊடாக வெளிக்கொணரமுடியும். அத்துடன் உற்பத்தியாளர்களை இனங்காண்பது மட்டுமல்லாது அவர்கள் இவ் வியாபாரப் பின்னணியில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்களை இனங்காண்பது அவசியமானது ஒன்றாகும். வியாபாரப் பின்னணியில் ஏற்படும் கடன்கள், கட்டமைப்பு வசதிகள், சந்தைப்படுத்த முடியாத விடயங்கள் தொடர்பான பிரச்சினைகளை இனங்காண்பது அவசிமானதாகும்.

இத்திட்டத்தினைச் செயற்படுத்துவதன் மூலம் இளம் உற்பத்தியாளர்களை இனங்கண்டு ஏற்றுமதி செய்ய வழிவகுத்தல் அவசியமானதொன்றாகும். ஏனெனில் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்றுமதியின் பங்களிப்பானது **5-6%** ஆக காணப்படுவதால் எமது உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமே ஏற்றுமதியினை அதிகரிக்க முடியும்.

பிரதேசசெயலக வரலாற்று பின்னணியில் காணப்படும் இப் பிரதேசமானது இறைவரி அலுவலர் (Divisonal Revenue) அலுவலகமாகவே காணப்பட்டது. இது கிராமசேவகர் பிரிவாக காணப்பட்டு பின் இவ் முறைமை ஒழிக்கப்பட்டு (AGA) பிரதேச உதவி அரசாங்க அதிபர் முறை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இது யாழ்ப்பாணம் நல்லூர் ஆகிய இரு பிரதேச முறைமையை கொண்டு பின் தனியாகப் பிரிக்கப்பட்டு யாழ்ப்பாணப் பிரதேசமாக ஆக்கப்பட்டது. இது சனத்தொகையை கருத்திற் கொண்டு **28** கிராம அலுவலர் பிரிவாக மாற்றம் பெற்றது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் மூன்று இன மக்களும் காணப்படுவதோடு மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டு ஒருபக்கம் நிலத்துடன் தொடர்புள்ளதாகக் காணப்படுகின்றது இப்பிரதேசங்கள் (J61-J81) கூடுதலாக கடற்கரையை அண்டி காணப்படுவதால், மீன்பிடித் தொழிலே வாழ்வாதாரமாகக் காணப்படுகின்றது. ஏனெனில் இதனாலேயே வருமானம் உழைத்தலின் விகிதம் கூடுதலாகக் காணப்படுகின்றது, மற்றும் விவசாயத்துறைக்கு உகந்த மண் காணப்பட்டாலும் விவசாயம் செய்வதற்குரிய, இதரவளங்கள் (நீர் வசதிகள்,மனிதவளங்கள்,கால்வாய்கள்) என்பன காணப்படாமையால் பெரியளவு பங்கினைப் பெறுவதில்லை இதனைவிட இப்பிரதேசத்திற்குட்பட்ட இடங்களில் கல்வி, கலாச்சார, மத, வரலாற்று முக்கியத்துவ இடங்களும் காணப்படுகின்றன. அதாவது கோட்டைப்பகுதி, மதஸ்தலங்கள், பொதுசன நூலகங்கள், முக்கிய தேசிய பாடசாலைகள் பிரசித்தி பெற்ற தனியார் பாடசாலைகள் என்பன காணப்படுகின்றன.

பிரதேச செயலகத்தின் வடக்கின் ஒரு பகுதி நல்லூர் பிரதேச செயலகப் பிரிவும், கிழக்கின் மிகுதிப் பகுதி, தெற்கு மற்றும் மேற்கின் ஒரு பகுதி கடல் நீரேரியாகவும் மேற்கின் ஒரு பகுதி சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவினையும் எல்லையாகக் கொண்டுள்ளது. நிலப்பரப்பு **10.92$Km^2$** ஆகவும், நீர்ப்பரப்பு **0.39$Km^2$** ஆகவும் காணப்படுகின்றது. இது ஓர் நகர்ப்புறமாகும், நதிகள் ஆறுகள் என்பன காணப்படாவிட்டாலும் கால்வாய் அமைப்புக்கள் வெள்ள நீர் கடலுக்கு எடுத்துச் செல்ல காணப்படுகின்றன. இங்கு வெப்பநிலை அதிகமாகவும் மழைவீழ்ச்சி குறிப்பிட்ட கால அளவில் குறைவாகவும் காணப்படும். நிலத்தடி நீர்

கடற்கரையோரப் பிரதேசத்தில் உலர் நீராகவும், உட்பரப்புக்களில் சில இடங்களில் நன்னீர் காணப்படுகின்றது.

எமது பிரதேச செயலகப் பிரிவில் 28 கிராமசேவையாளர் பிரிவினையும், 50 கிராமங்களையும் மற்றும் கமநலசேவைகள் திணைக்களம் ஒன்றினையும், பொலிஸ் நிலையம் 02 னையும் கொண்டுள்ளது. எமது பிரதேச செயலகம் மாநகரசபைக்கு உடட்பட்டதாகவே காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் மொத்த சனத்தொகை **22,409,381** எண்ணிக்கை ஆகவும் எமது பிரதேச சனத்தொகை **52244** எண்ணிக்கை ஆகவும் காணப்படுகின்றது.

மீன்பிடித் துறையே பிரதான தொழிலாகவும், வருமானத்தை ஈட்டும் தொழிலாகவும் காணப்படுகின்றது. ஏனெனில் மீன்பிடிப்பாளர்களின் எண்ணிக்கை கரையோரத்தை அண்டியதாகவும் காணப்படுவதால் இது முக்கியம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

சிறுகைத் தொழில்களாக அழகுபடுத்தல், தையல் பயிற்சி, உணவு உற்பத்தி, தும்புக் கைத்தொழில், கைவினைப்பொருட்கள் (Paper Art, Craft, தென்னை சார் உற்பத்திகள்) என்பனவும் காணப்படுகின்றன மற்றும் மொத்த சில்லறை வர்த்தகர்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், தொழிற் கல்வி நிறுவனங்கள் என்பன காணப்படுகின்றன.

## 2. குறிக்கோள் மற்றும் நோக்கங்கள்

**குறிக்கோள்:**

பிரதேச செயலகத்தின் தொழில் முயற்சியின் செறிவினை அதிகரிப்பதன் மூலம் வேலை இன்மை, வறுமை போன்றவற்றை குறைப்பதன் மூலமும் கிராமிய, பிராந்திய பொருளாதாரம் அபிவிருத்தியை அடைவதன் மூலமும் தேசிய பொருளாதாரத்திற்கான பங்களிப்பினை அதிகரித்தல்.

**நோக்கங்கள்**

- 2022 ஆம் வருடமாகும் போது புதியதொழில் முயற்சிகள் **84** ஆரம்பிக்கப்படுதல்.
- 2022 ஆம் வருடமாகும் போது ஏற்கனவே இருக்கும் தொழில் முயற்சிகளை **840** ஆல் அதிகரித்தல்.
- தொழில் முயற்சித் துறையில் வேலைவாய்ப்பினை அதிகரித்தல்.
- வியாபாரப் பெயர்ப் பதிவினை அதிகரித்தல்.
- தற்போது உள்ள தொழில் முயற்சிகளின் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வது சம்பந்தமாக நபர்களை அதிகரித்தல்/ பரிந்துரைத்தல்.
- ஏற்றுமதி தரநிலைக்கு நபர்களைத் தயார்ப்படுத்தல்.
- தொழில்நுட்ப வசதி பயிற்சியளித்தல்
- மூலதன நிதி அதிகரிப்பு
- சந்தைவாய்ப்பு பெற்றுக் கொடுத்தல்
- தரப்படுத்தல்/சான்றிதழ் வழங்கல்கள்

## 3. இலக்கு குழுக்கள்

- ஒரு தொழில் தொடங்க விருப்பம் மற்றும் ஆர்வமுள்ள இளம் தலைமுறையினர்.

- தற்போது தொழில் முயற்சித் துறையில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியாளர்.

## 4. செயன்முறை

இச் செயற்திட்டம் தொடர்பாக எமது பிரதேச செயலகப் பிரிவில் காணப்படும் **28** கிராமசேவையாளர் பிரிவில், ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிற்கும், ஒவ்வொரு புதியதொழில் முயற்சியும், பத்து தற்போது நடைமுறையிலுள்ள தொழில் முயற்சியை அபிவிருத்தி செய்தலும் எமது நோக்கமாகும். இதில் வருடரீதியாக **28** புதிய தொழில் முயற்சியும், **280** தற்போது நடைமுறையில் உள்ள தொழில் முயற்சியை அபிவிருத்தி செய்து மொத்தமாக 3 ஆண்டிற்கும் (2020-2022) **84** புதியதொழில் முயற்சியும் **840** நடைமுறையிலுள்ள தொழில் முயற்சியை அபிவிருத்தி செய்வதும் எமது குறிக்கோளாகும்.

எமது பிரதேச செயலகத்தின் தொழில் முயற்சிப் பின்னணியை நோக்கும் போது முக்கியமான தொழில் துறைகளில் (உணவு, ஆடை, அழகுக்கலை, தும்புக் கைத்தொழில், சிரட்டைஉற்பத்தி, மீன்பிடி, கால்நடை, விவசாயம்) மீன்பிடித்துறையே முக்கியமான தொழில் துறையாகக் காணப்படுகின்றது. இதில் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை **2108** ஆகவும், கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை **4941** ஆகவும் பதிவு செய்யப்பட்ட வியாபார நிறுவனங்கள் **6227** ஆகவும், சுய தொழில் ஊழியர்களின் எண்ணிக்கை **9300** பேராகவும் காணப்படுகின்றனர்.

எமது பிரதேசத்தை நோக்கும் போது பொருத்தமான விசேட தொழில் முயற்சியாக மீன்பிடித் தொழிலே காணப்படுகின்றது. ஏனெனில் பிரதேச மக்கள் இத்தொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். இம் மீன் பிடியைப் பொறுத்தவரையில் ஆழ்கடல் மீன்பிடி, சிறகுவலை, நண்டுவலை, இறால், நண்டு ஏற்றுமதி, கருவாடு பதனிடல், ஐஸ் உற்பத்திகளும் காணப்படுகின்றன. மற்றும் இதற்கேற்ற வகையில் இறங்கு துறைமுகங்களும், சந்தை அமைப்புக்களும் காணப்படுகின்றன. இங்கு ரோலர் படகுகள், வெளியிணை பூட்டப்பட்ட இயந்திரப்படகுகள் என்பன மூலம் தொழில் மேற்கொள்ளப்படுகின்றன. மற்றும் கடற்றொழில் சங்கங்கள், கடற்றொழில் சமாசங்கள் என்பனவும் பிரதேசங்களுக்கு இடையே அமைந்துள்ளன. சீனோர், சமுத்திர கற்கை நிறுவனங்களும் உள்ளன.

# மூன்றாண்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் கட்டங்கள்.

## திட்டமிடல் கட்டம்:

இத்திட்டமிடல் கட்டத்தின் செயற்பாடாக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திக்காக சம்பந்தப்பட்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து எந்த வகையில் இவ் நிறுவனங்களிடம் உதவிகளைப் பெறலாம் என ஆலோசித்தல் வேண்டும். அதன் மூலம் கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை வங்கியிடமும், சமுர்த்திவங்கி, கிராமிய அபிவிருத்தி வங்கி போன்ற கடன் நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

கால்நடைவளர்ப்பு தொடர்பாக மிருகவைத்திய அதிகாரிகளுடனும், வேளாண்மை விருத்தி தொடர்பாக கமநலசேவைகள் திணைக்களத்தின் உதவியையும் பெற முடியும். மீன்பிடி தொடர்பாக மீன்பிடித் திணைக்களம், சீனோர், சமுத்திரக் கற்கைகள் நிறுவனம் போன்றவற்றின் ஊடாகவும் VTA, ATI, (IDB) கைத்தொழில் அபிவிருத்தி சபை, ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை (EDB), தேசியதொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை (NEDA) கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு (ONUR) போன்ற அரச அமைப்புக்களுடனும், மற்றும் எமது பிரதேச பிரிவிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களான கியூடெக், சிங்கர் நிறுவனம்,அழகுக் கற்கைகள் நிறுவனம், தனியார் தொழில் வழிகாட்டல் நிறுவனங்களான, கணணி நிறுவனங்கள், NEFART, கியூடெக், போன்றவற்றுடன் அபிவிருத்திதிட்டம் சம்பந்தமாகத் திட்ட அறிமுகத்தை ஏற்படுத்துதல்.

## ஒப்பந்தக் கட்டம்:

திட்டமிடப்பட்ட நிறுவனங்களை எமது பிரதேசசெயலர் ஊடாக வரவழைத்து இது தொடர்பான கலந்துரையாடல்களோ / விழிப்பணர்வுக் கூட்டங்களோ / ஒப்பந்தக் கடிதங்களையோ வடிவமைப்பதன் மூலம் திட்டத்தினை அபிவிருத்திசெய்ய முடியும்..

## செயற்பாட்டுக் கட்டம்:

நாம் அடையாளம் காணப்பட்ட குழுவினைத் தெரிந்தெடுத்து திட்டமிடல் கட்டத்தில் குறிப்பிட்ட அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடன் எமது பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தலோடு பயனாளிகளை ஒன்றிணைத்து அவர்களுக்குரிய புதியதொழில் முயற்சிக்கும், நடைமுறையிலுள்ள தொழில் முயற்சியை அபிவிருத்தி செய்ய ஒன்றிணைத்தல் வேண்டும்.

## பின்தொடர் ஆய்வு மற்றும் மதிப்பீட்டுக் கட்டம்:

தொடர்புபட்ட தொழில் முயற்சிகளில் பயனாளிகளை இணைப்பதோடும், அவர்களது தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு நிறுவனங்களுடன் இணைப்பினை ஏற்படுத்துவது மட்டுமல்லாது மற்றும் மூலவளப்பற்றாக்குறை, நிதி நெருக்கடி, சந்தை வாய்ப்பின்மை, உட்கட்டமைப்பு வசதியின்மை மற்றும் வெளியகக் காரணிகளால் (அரசியல்,பருவகாலநிலை) ஏற்படும் இடர்பாடுகள் என்பவற்றை உற்று நோக்கி கலந்துரையாடிப் பிரச்சினைகளுக்கான தீர்வினையும், தொடர்ச்சியான கண்காணிப்புடனும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

# 5. SWOT

## புதிய முயற்சியாண்மை

| சாத்தியமான துறை | பலம் | பலவீனம் | வாய்ப்பு | அச்சுறுத்தல் |
|---|---|---|---|---|
| **விவசாயம்** | • உலர்வலயப் பிரதேசம்.<br>• பெரும்பாலான பிரதேசங்கள் கரையோரம் சார்ந்து காணப்படுவதால் மண்ணின் தன்மை ஈரலிப்பாக காணப்படுகின்றது<br>• நெல்லுக்கான கேள்வி காணப்படுதல் | • நெற் செய்கைக்குரிய புதிய உபகரணங்கள் இல்லாமை.<br>• பருவகால அடிப்படையில் விவசாயம் மேற்கொள்வதால் நிலையான வருமானம் இன்மை.<br>• விவசாயம் செய்ய நாட்டமின்மை.<br>• குளங்கள், கால்வாய்கள், நீர்வசதிகள் தகுந்த வழிகளில் விவசாயத்திற்கு பயன்படுத்தாமை. | • கமநலசேவை திணைக்களத்தால் விவசாயம் பற்றி தேவையான ஆலோசனைகள் பெறுதலும்.மானியங்களைப் பெறுதலும்.<br>• குளங்கள் காணப்படுகின்றன.<br>• தென்னங் கன்றுகள் குறுகிய கால தர விதைகள் என்பன அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன. | • நெல் உற்பத்தியில் புதிய தொழில் நுட்ப மாற்றங்கள்.<br>• அரச விலை நிர்ணயங்கள் (கட்டுப்படுத்தியவிலைகள்)<br>• விவசாய கடன்களுக்கான வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றம்.<br>• அரசியல் மாற்றங்கள். |
| **மீன்பிடி** | • மீன் பிடியாளர்கள் பரம்பரையாகவே தொழிலில் ஈடுபடுபவர்களாகக் காணப்படுகின்றனர்.<br>• கடல்வளம் காணப்படுதல்<br>• அதிக வெப்பநிலை காணப்படுதல். (கருவாடு,கடலட்டை,இறால், கணவாய் பதனிடுவதற்கு)<br>• மீன்பிடி தொடர்பான சந்தை வசதிகள் காணப்படுதல் (பாசையூர்,கொட்டடி, நாவாந்துறை,குருநகர்)<br>• ஆழ்கடல் சுழியோடிகள் காணப்படுகின்றனர்.<br>• கரையோர நண்டுவலை, கணவாய் என்பன சிறு மீன்பிடி நடவடிக்கைகளினை மேற்கொள்ளலாம். | • மீன் பிடிப்பவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மையால் மீன்பிடியில் ஈடுபடவிடாமல் தமது பிள்ளைகளை வேறு திசைப்படுத்தல்.<br>• நவீன மீன்பிடி உபகரணம் காணப்படாமை.<br>• ஆழ்கடல் மீன்பிடி உபகரணங்கள் இல்லாமை.<br>• துறைமுகங்கள் காணப்பட்டாலும் அபிவிருத்திகள் காணப்படாமை.<br>• சந்தைப்படுத்த குளிரூட்டல் வசதிகள் குறைவாக காணப்படுகின்றமை. (பனிக்கட்டி, ஐஸ் காணப்படாமை).<br>• களஞ்சியப்படுத்தல் வசதிகளின் பற்றாக்குறை.<br>• சிறுதொழில் செய்யமுடியாமை. | • பொதுச் சந்தைகள் காணப்படுகின்றமை.<br>• சமுத்திர கற்கை நெறிகள் காணப்படுகின்றது. அங்கு பல கடற்றொழில் சம்பந்தமான பல பயிற்சி நெறிகள் காணப்படுகின்றன.<br>• NEFART: வலைபின்னுதல், கடற்றொழில் சம்பந்தமான உபகரணங்கள் உற்பத்தி செய்தல்.<br>• பனிக்கட்டி தேவையேற்படின் பனிக்கட்டிஅறைகள் அமைத்தல் வேண்டும்.<br>• எரிபொருள் நிரப்பு நிலையம் இன்மை, வெளிச்சவீடு இன்மை, முதலீடு காணப்படவேண்டும். | • வளச்சுரண்டல் ஏற்படுதல் ரோலர் போன்ற படகுகளால் சிறிய மீனினங்கள் அழிவடைகின்றமையால் மீனினங்கள் அழிவடைகின்றன.<br>• எல்லைப் பிரச்சினை. இந்திய மீனவரின் வருகை.<br>• அரசியல் தலையீடுகள்.<br>• தொழில் முறைகளில் மாற்றம்.<br>• பருவகாலமாற்றங்கள்.<br>• இயற்கைஅனர்த்தங்கள். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | • மூலதனப் பிரச்சினையால் (வறியமக்கள்) தொழில் செய்வதற்குரிய வாய்ப்புக்கள் இன்மை. | | |
| **கால்நடை** | • கால்நடை வளர்ப்புக்கு இட வசதிகள் காணப்படுகின்றமை.<br>• தங்கி வாழ்வோர் காணப்படுகின்றமை. | • இவ் வளர்ப்புத் தொடர்பான அறிவின்மை.<br>• சந்தைப்படுத்த முடியாத நிலைகள்.<br>• பசுமையான, புற்தரைகள் காணப்படாமை. | • கால்நடை வளர்ப்பு, திணைக்களங்கள் காணப்படுதல்.<br>• கால்நடை வைத்தியசாலைகள் காணப்படுதல். | • காலநிலை மாற்றங்களால் நோய்த்தொற்று மற்றும் அசௌகரியங்கள் ஏற்படுதல்.<br>• அனுமதியற்ற கால்நடை வளர்ப்புக்களை சுகாதார உத்தியோகத்தர்கள் தடை விதித்தல். |
| **கைத்தொழில்** | • பரம்பரையாகவே இத் தொழில் புரிவதற்கான தொழிலாளர் காணப்படுகின்றனர். (காலணி, ஆடை, தும்பு உற்பத்தி)<br>• பயிற்றப்பட்ட தொழிற் படைகள் காணப்படுதல்.(வலை பின்னுதல்.சமுத்திர கற்கை ஊடாக மீன்பிடி தொடர்பான கற்கைநெறிகள்.)<br>• உணவு உற்பத்தி, தென்னை சார் உற்பத்தி காணப்படுதல். (கயிறு, கால்மிதி, தும்புசார் உற்பத்தி) | • உற்பத்தியில் ஈடுபட்டாலும் மூலப்பொருள் பெறுவதில் பிரச்சினை (தும்பு உற்பத்திற்கு பச்சை மட்டை எடுத்தல் மற்றும் காலணிக்கு தோற் பொருட்கள் எடுத்தலில் பிரச்சினை)<br>• உள்ளூர் உற்பத்தி பொருட்கள், வெளியீட்டு இறக்குமதிக்கு போட்டிபோட முடியாமல் உள்ளது.<br>• சந்தை வாய்ப்பினை தொடர்ந்து மேற்கொள்ள முடியாமை, பொதியிடல் திறனின்மை, அதற்குரிய வசதி வாய்ப்புக்கள் இன்மை)<br>• புதியதொழில் நுட்ப மாற்றம் (பொதியிடல்,விளம்பரப்படுத்தல், சிட்டை அல்லது விபரத்துணுக்கு மாற்றங்கள்)<br>• பயிற்சி பெறமட்டுமே ஊழியப்படை விரும்புதல். அதனை தாமாகவே புதிய முயற்சியில் ஈடுபடாமை. | • சிறு கைத்தொழில் தொடர்பான கல்வி நிறுவனங்கள் காணப்படுதல். (கியூடெக், VTA, விதாதா, சமுத்திர கற்கைகள் நிறுவனம்)<br>• சிறு கைத்தொழிலுடன் தொடர்புபட்ட கடன்கள் வழங்கும் நிறுவனங்கள் காணப்படுதல். (BOC, சமுர்த்தி வங்கி, கிராமிய அபிவிருத்தி வங்கி, NADA)<br>• ஏனைய கடன் வழங்கும் கிராமிய கூட்டுறவு, சிக்கனச் சங்கம், போன்ற நிறுவனங்கள் காணப்படுதல். | • தமது குடும்ப சூழ்நிலை காரணமாக வேறு நிலையான தொழில் தேடியும் அதிக வருமானம் தேடியும் வெளியூர் செல்லல்.<br>• உற்பத்திப் பொருட்களை பல்வகைப்படுத்தாமை. (பிளாஸ்ரிக்)<br>• பதிலீட்டு உற்பத்திப் பொருட்களின் வருகை. கயிறு – வயர் தும்புத்தடி – றபர் தும்பு விளக்குமாறு – றபர்<br>• அரசியல் மாற்றம். |

| | | | | |
|---|---|---|---|---|
| **சேவைத்துறை** | • மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள், வியாபார நிறுவனங்களும் அதிகமாக காணப்படுதல்.<br>• இயற்கையாக அமைந்துள்ள பிரசித்தி பெற்ற சுற்றுலாப் பிரதேசங்கள் காணப்படுகின்றது. (கோட்டை, நூலகம்)<br>• அழகுக்கலை சார்ந்த மனித வளம் காணப்படுதல். | • நகர் புறங்களில் வியாபார நிலையம் அமைப்பதற்கான இடப்பிரச்சினை.<br>• சொந்தமாக செய்வதற்காக (அழகுகலை பயிற்சி நிலையம்) நிதிபற்றாக்குறை.<br>• பொலிஸ் நிலையம் மற்றும் சிறைச்சாலை அமைவிடம், பொருத்தமான இடத்தில் அமையப் பெறாமை. | • சுற்றுலாப் பயணிகள் வருவதற்கான கடற் பிரதேசங்கள் காணப்படுதல். (பண்ணை,கோட்டை)<br>• நகர் புறத்தில் தங்குமிட வசதிகள் காணப்படுதல். (US Hotel, Green Grass, Jetwin, Tilko,Valampuri)<br>• வங்கிச் சேவைகள், காப்புறுதி சேவைகள், தகவல் தொழில்நுட்ப வசதிகள் காணப்படுகின்றன. (செலிங்கோ, BOC, கூட்டுறவுச்சங்கஙகள். Telecom)<br>• அழகுகலை தொடர்பான பயிற்சி நிலையங்கள் காணப்படுதல். (Beauty Parlour) | • சூழல் மாசடைதல். (இடநெருக்கடி, கழிவுகள் வெளியேற்றல் போன்ற பிரச்சினைகள்)<br>• வருமானவரி, போக்குவரத்துச் சேவை மீதானவ ரிகள், இடத்திற்கான குத்தகை பெறுமதிகளின் மாற்றம் போன்றன.<br>• அரசியல் மாற்றம் |

# தற்போதுள்ள தொழில் முயற்சியாளர்கள்

| அடையாளம் காணப்பட்ட தொழில் துறைகள் | பலங்கள் | பலவீனம் | வாய்ப்பு | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|---|
| **விவசாயம்** | • 12 ஏக்கர் விவசாய நிலப்பரப்பு காணப்படுதல்<br>• 28 குளங்கள் காணப்படுகின்றமை<br>• உலர் வலயப் பிரதேசமாக காணப்படுவதால் சாதகமான காலநிலை காணப்படல்<br>• விவசாய மனித வளம் காணப்படல்<br>• தென்னை, பனை வளங்கள் காணப்படல் | • நீர்பாசன வசதி போதியளவு காணப்படாமை.<br>• குளங்கள் புனரமைக்கப்படாமை.<br>• விவசாயம் குறுகிய கால வருமானம் ஆகையால் வேறு தொழிலில் ஈடுபடுதல்.<br>• நெல் பயிர்ச்செய்கை கேள்வியை பூர்த்தி செய்ய முடியாமை.<br>• புதியதொழில் நுட்ப உபகரணங்களின் பாவனை, பயன்படுத்த முடியாத நிலை | • புதிய தொழில் நுட்ப வருகையைப் பயன்படுத்தல்.<br>• விவசாயம் தொடர்பான அறிவின்மையைப் பெற்றுக் கொள்வதற்கு விவசாயத் திணைக்களத்தினூடாக அறிவினையும், ஆலோசனையையும் பெறல்.<br>• விவசாயத்திற்கான மானியம், உதவிகள், கடன்வசதிகள் பெற்றுக் கொடுத்தல். (மரக்கன்றுகள்,மிளகாய் செடி,கத்தரி,தக்காளி கன்றுகள் வழங்கல்)<br>• மழைநீர் சேகரிப்பு செய்தல் மூலம் அறுவடை மேற்கொள்ளலாம். | • புதிய தொழில் நுட்ப வருகை (புதிய விவசாய உபகரணங்களின் விலை அதிகமாயிருத்தல்)<br>• வெள்ளப்பெருக்கு, இயற்கை அனர்த்தங்கள், பருவகால மழைவீழ்ச்சியில் மாற்றம்.<br>• புதிய தொற்றுக்கள் விவசாய தாவரங்களிடையே காணப்படல்.<br>• இரசாயனங்களின் பாவனை.<br>• அரச காணிகளை அத்துமீறல் காரணமாக அரச தலையீடு. |
| **மீன்பிடி** | • மீனவக் குடும்பங்களை அதிகமாகக் கொண்ட பிரதேசமாகும்.<br>• பரம்பரையாகவே தொழிலை மேற்கொள்பவர்கள். (மீன்பிடி)<br>• இறங்கு துறைமுகங்கள் காணப்படுகின்றமை.<br>• வாடிகள் காணப்படுகின்றமை<br>• கடல் வளமே மூலதனமாக காணப்படுதல். | • கடற்றொழில் செய்வதை கௌரவக் குறைவாக எண்ணுதல்.<br>• பாரிய ஐஸ் தொழிற்சாலைகள் இன்மை.<br>• சந்தை வாய்ப்புக்கள் இருந்தும் போக்குவரத்து வசதிகளின் தாமதம்.<br>• இறங்குதுறைகள், வாடிகள் என்பவற்றுக்கான அபிவிருத்தி காணப்படாமை. | • சந்தை மையங்கள் காணப்படுதல். (கொட்டடி,பாசையூர், நாவாந்துறை, குருநகர்)<br>• சந்தைப்படுத்தும் வசதிகள் சிறிதளவில் காணப்படல் (நண்டு, இறால்,கணவாய் ஏற்றுமதி ஐஸ் மூலம் கொண்டு செல்லல்)<br>• NEFART நிறுவனம் காணப்படுதல் (வலைப் பயிற்சி) | • டைனமற் மூலம் மீன் பிடித்தலால் நச்சுத் தன்மை ஏற்படுவதால் கடல்வளம் பாதிப்படைதல்<br>• ரோலர் மீன்பிடி மூலம் சிறியமீன் இனங்கள் அழிக்கப்படுகின்றமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | • கரையோரப் பிரதேசம் ஆகையால் வேறு சிறுதொழில்களும் மேற்கொள்ளலாம்.<br>• (கரைவலை,மீன்பிடி,இறால்) | • ரோலர் மூலம் சிறுதொழில்கள் பாதிக்கப்படுகின்றமை.<br>• பழைய தொழில் முறைகளைப் பின்பற்றுதல். | • புதிய தொழில்நுட்ப வருகை (ரோலர்)<br>• சமுத்திரகற்கை மூலம் தொழில் வாய்ப்பு கற்கை நெறிகளைப் பெற்றுக் கொள்ளல். | • அரசியல் மாற்றங்கள் மற்றும் தலையீடு, எல்லைப் பிரச்சினைகள் (கடல்), இந்தியமீனவர்கள் அத்துமீறி எமது கடல் எல்லைக்குள் மீன் பிடித்தல். |
| **கால்நடை** | • பறவை இன வளர்ப்பு (24355) கோழி, வாத்து கூடுதலாக காணப்படுகின்றது<br>• சில கிராமசேவையாளர் பிரிவில் இடப்பரப்புக்கள் காணப்படுகின்றமை | • சுகாதார அனுமதி, மாநகரசபை அனுமதி இன்றி பெருமளவில் இத்தொழிலை வீடுகளில் செய்யமுடியாது.<br>• நோய்த் தொற்று மனிதருக்கு ஏற்படக் காரணமாயிருத்தல்<br>• பரந்த இடங்கள், சாதகமான இடப்பரப்புக்கள் இருந்தும் வீட்டுத்திட்டங்கள் மூலமும் பொது அமைப்பு கட்டிடங்கள் மூலமும் காணி துண்டாடப்படுதல்.<br>• பால் உற்பத்தியை சந்தைப்படுத்த முடியாமை. | • கால்நடைத் திணைக்களம் காணப்படுதல். (கால்நடை வளர்ப்பு தொடர்பான அறிவுகளைப் பெற்றுக் கொள்ளுதல்.<br>• கால்நடைவைத்தியசாலை எமது பிரதேச பிரிவினுள் காணப்படுகின்றது. | • கால்நடைகளுக்கு புதிதாக நோய்கள் ஏற்படுதல்<br>• கால்நடைகளை களவாடுதல்<br>• பருவகால மாற்றங்களால் நோய்த் தொற்றுக்கள் ஏற்படுதல்.<br>• கால் நடைகளை இறைச்சிக்கு பயன்படுத்துதல். |
| **கைத்தொழில்** | • பயிற்றப்பட்ட மனித வளம் காணப்படுதல்.<br>• சுயதொழிலாளர் 9300 ஊழியர்கள் காணப்படுதல்.<br>• கைத் தொழிற்சாலைகள் காணப்படுதல். (வலை பின்னுதல்) | • பயிற்றப்பட்ட மனித வளம் காணப்பட்டாலும் இவ் மனித வளம் பயிற்சியின் பின் வேறு தொழில் வருமானத்திற்காக வேறு நிறுவனங்களில் தொழில் புரிதல்.<br>• கைத்தொழில் தொடர்பான அறிவு பெற விருப்பமின்மை.<br>• சுய தொழிலாளருக்கான முதலீடு, நிதிப் பற்றாக்குறை.<br>• நிலையான வருமானமின்மை காணப்படுதல். | • பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் 6227 காணப்படுதல்.<br>• சந்தை வாய்ப்புக்கள் கூடுதலாக காணப்படுதல்<br>• கைத்தொழில் பயிற்சிகள் ஆலோசனைகள் வழங்க தேவையான இடங்கள் காணப்படுதல்.<br>• இடைத்தரகு நிறுவனங்கள் மூலம், ஒப்பந்த ரீதியிலோ நம்பகத் தன்மை அடிப்படையிலோ விற்பனை செய்யும் வாய்ப்பு. | • நகர்புற இட அமைவு, இடப்பற்றாக்குறை காரணமாக சூழல் மாசடைதல்<br>• வருமான உழைப்பின் மீதம், இட அமைவிற்கான வரியும் குத்தகை பெறுமதிகளில் ஏற்படும் மாற்றம்.<br>• இடைத் தரகர்கள் மூலம் பொருட்களை விற்கும் போதும், ஏற்றுமதி செய்யும் போதும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடையேயான நம்பகத் தன்மை. |

| | | | | |
|---|---|---|---|---|
| **சேவைத் தொழில்** | • பெருந்தெருக்கள் காணப்படுகின்றமை.<br>• கல்வி சார் மூல வளங்கள் காணப்படுகின்றமை<br>• தெரு விளக்குகள் காணப்படுகின்றமை.<br>• தனியார், அரச போக்குவரத்து தரிப்பிடம் காணப்படுகின்றது.<br>• Telecom, Dialog, தொடர்பாடல் நிறுவனங்கள் காணப்படுகின்றது. | • சில கிராம சேவையாளர் பிரிவிற்கு மட்டப்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதிகள் காணப்படுதல்.<br>• சிறிய வீதிகள் புனரமைக்கப்படாமை.<br>• கல்வி சார் மனித வளம் வெளியேற்றம். (வெளிநாடு செல்லல்) | • உட்கட்டமைப்பு வசதிகள் மூலம் சந்தை வாய்ப்பை பெருக்கி கொள்ளலாம்<br>• எந்நேரமும் போக்குவரத்து வசதிகளை மேற்கொள்ளலாம்.<br>• தொழிற் கல்வி நிறுவனங்கள் காணப்படுதல். (ATI, VTA) | • அரசியல் மாற்றங்கள்.<br>• வாகன நெருக்கடி அதிகமாகக் காணப்படுவதால் சூழல் மாசடையும் அபாயம் அதிகளவில் காணப்படுகின்றது.<br>• தொடர்பாடல் நிறுவனங்கள் காணப்படுவதால் கதிர் வீச்சு தாக்கம் காணப்படுகின்றது. |

## 6. முக்கியமான தந்திரோபாய வழிகள்

### புதிய தொழில் முயற்சி.

| எண் | தொழில் தந்திரோபாயம் | துறைகள் |
|---|---|---|
| 1 | விசேட திட்டங்கள். | மீன்பிடித்துறை |
| 2 | தனிநபர் ஆலோசனை. | கள விஜயம் மற்றும் ஏனைய கைத்தொழில் சார் உத்தியோகத்தர்களின் உதவிகள். |
| 3 | பெறுமானம் சேர்த்தல். | கைத்தொழில் துறை |
| 4 | உப ஒப்பந்தங்களைப் பெறுதல். | கைத்தொழில் துறை, மீன்பிடித் துறை<br>NVQ- NAITA நிறுவனம்<br>கடன் திட்டம்- BOC சமுர்த்தி, கிராமிய கூட்டுறவு வங்கி) |

# தற்போதுள்ள தொழில் துறை

| எண் | உபாயவழிகள் | துறைகள் |
| --- | --- | --- |
| 1 | சந்தை வாய்ப்பு வழங்குதல் | விவசாயம்<br>கைத்தொழில்,<br>சேவை |
| 2 | தொழில் நுட்பவசதி | விவசாயம்<br>கைத்தொழில்<br>சேவை |
| 3 | நிதி வசதி | விவசாயம்<br>கைத்தொழில்<br>சேவை |
| 4 | அறிவு மற்றும் திறன் மேம்பாடு | விவசாயம்<br>கைத்தொழில்<br>சேவை |
| 5 | நிறுவனங்களினை ஒன்றிணைத்தல். | விவசாயம்<br>கைத்தொழில்<br>சேவை |

## எதிர் பார்த்த இலக்கு (KPI)

| எண் | துறை/பிரிவு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | புதிய தொழில் முயற்சியை ஆரம்பித்தல் | 84 |
| 2. | வியாபாரத்தைப் பதிவு செய்தல் | 60 |
| 3. | தனிப்பட்ட ஒருவருக்கான தொழில்நுட்பம் | 10 |
| 4. | கடன் பெற்றுக் கொடுத்தல் | 70 |
| 5. | குழுக்களுக்கான தொழில்நுட்பம் | 200 |
| 6. | கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்தல் | 100 |
| 7. | வியாபாரத் திட்டங்களைத் தயாரித்தல் | 70 |
| 8. | தொழில் முயற்சிக்கான ஆலோசனை | 160 |
| 9. | சந்தைப்படுத்தல் தொடர்புகளை ஏற்படுத்தல் | 70 |
| 10. | GMP | 10 |
| 11. | NVQ | 70 |
| 12. | வியாபாரக் குறியினை மேம்படுத்தல். | 10 |
| 13. | ஏற்றுமதிக்குத் தயார்ப்படுத்தல். | 10 |

# 07. கிராமிய முயற்சியாண்மை அபிவிருத்தி செய்தல் மூன்று வருடத் திட்டம் சுருக்கக் குறிப்பு

| **உபாய வழிகள்** | **நடவடிக்கைகள்** | **செயல்பாட்டிற்கான காலம்** | | | **பொறுப்பு** | **முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (KPI)** | **பங்காளி நிறுவனம்** | **உத்தேச மதிப்பீடு** |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2020 | 2021 | 2022 | | | | |
| **புதிய தொழில் முயற்சியை ஆரம்பித்தல்.** | • தனிநபர் ஆலோசனை வழங்கல்.<br>• பெறுமானம் சேர்த்தல்.<br>• உப ஒப்பந்தங்களைப் பெறல். | 28 | 28 | 28 | **DO** | 84 | • Field Visit.<br>• Packaging, Branding programme | |
| **முயற்சியாளர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டுத்தல். தரப்படுத்தல் சான்றிதழ்கள் வியாபாரக் குறியீட்டினை மேம்படுத்தல்** | • பிரதேச மட்டத்திலான கண்காட்சி நடாத்தி அதில் பங்குபற்றச்செய்தல்.<br>• மாவட்ட ரீதியில் சிறுதொழில் முயற்சிப்பிரிவில் நடாத்தப்படும் யாழ் முயற்சியாளர் கண்காட்சியில் பங்குபற்ற வைத்தல்.<br>• BMICH கண்காட்சியில் பங்கு பெற வைத்தல்.<br>• சமூக வலைத் தளங்களின் ஊடாக சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்.<br>Marketing need Analysis<br>• உற்பத்திப் பொருள் தரச் சான்றிதழுக்கான பயிற்சி நெறிகளை வழங்குதல் | 30 | 30 | 30 | **DO** | 90 | சமுர்த்தி, விதாதா, யாழ் முயற்சியாளர் கண்காட்சி | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வியாபார பெயர் பதிவு செய்யும் முயற்சியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல். | • விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல்.<br>• வியாபார பெயர்ப்பதிவுடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் முயற்சியாளர்களை ஒழுங்கமைத்தல்.<br>• வியாபார பெயர்ப் பதிவினை பெற்றுக் கொள்ளும் வரை தொடர்ச்சியாக வழிகாட்டல். | 20 | 20 | 20 | DO | 60 | பிரதேச செயலக கணக்குக் கிளையுடன் தொடர்புகளை ஏற்படுத்தல். | |
| அரச வங்கிகள் மற்றும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் கடன் திட்டங்களுக்கு பயனாளிகளை பெற்றுக் கொள்ள வழி முறைகளை ஏற்படுத்தி கொடுத்தல். | • கடன் பற்றிய அறிவை வழங்கல்<br>• சான்றிதழ்<br>• வியாபார திட்டம் தயாரித்தல்<br>• வங்கிக்கு சமர்ப்பித்தல் . | 46 | 47 | 47 | DO | 140 | இலங்கை வங்கி(BOC), பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB), கிராமிய கூட்டுறவு வங்கி | |
| தனிப்பட்ட , குழுக்களுக்கான தொழில் நுட்ப பயிற்சிகளை வழங்குதல் | • Group IT Training<br>• Mini group IT Training<br>• NVQ Programme Induvial & Group | 93 | 93 | 94 | DO | 280 | NAITA | |
| முயற்சியாளர்களது கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல். | • Book Keeping Programme<br>• Business Consultancy Programme | 86 | 87 | 87 | DO | 260 | SEDD | |
| ஏற்றுமதி தொடர்பாக பரிந்துரைக்கு அனுப்புதல் | • ஏற்றுமதி அதிகார சபையுடன் இணைப்பு செய்தல். | 03 | 03 | 04 | DO | 10 | ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை | |

# 8.பின் இணைப்புக்கள்

மேலே அறிமுகத்தில் குறிப்பிட்ட புள்ளி விபரங்களும் அதன் விரிவான விளக்கங்களும் மற்றும் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தின் வரை படம், கிராம சேவையாளர் பிரிவு, சனத்தொகை, கல்வி, உட் கட்டமைப்பு வசதிகள், ஊனமுற்றோர், ஊழியப்படை, வேலையற்றோர், சமுர்த்திப் பயனாளிகள், வருமான மட்டம், கைத்தொழில், சேவை, போன்றவற்றின் தரவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.



# பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிராம சேவையாளர் பிரிவின் வரைபடங்கள்.






# சனத்தொகை

## மொத்த சனத்தொகை

| யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவு. | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| J/61-J/88 | 59,498 | 59,876 | 59,997 | 60,125 | 52,244 |

## பாலின ரீதியான அமைப்பு

| யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவு. | ஆண் | பெண் |
|---|---|---|
| J/61-J/88 | 24869 | 27375 |

## வயதுக் கட்டமைப்பு (வருட அடிப்படையில்)

| யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவு. | 00-14 | 15-44 | 45-74 | 75மேல். |
|---|---|---|---|---|
| J/61-J/88 | 15744 | 23084 | 12547 | 869 |

## வேலையற்றோர்

| யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவு. | பட்டதாரிகள் | A/L | O/L | மொத்தம். |
|---|---|---|---|---|
| **J/61-J/88** | **141** | **234** | **290** | **665** |

## வருமான மட்டம் (ரூபாவில்)

| யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவு. | 5000 | 5001-10000 | 10001-15000 | 15001-20000 | 20001-25000 | 25000 மேல். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| **J/61-J/88** | **6249** | **1608** | **925** | **825** | **2299** | **4282** | **16188** |

## ஊனமுற்றோர் எண்ணிக்கை


| யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவு. | பார்வை அற்றோர் | வாய் பேசாதோர். | மூளை வளர்ச்சி அற்றோர். | நோய் வாய்ப்பட்டோர் | கால் ஊனமுற்றோர். | ஏனையோர் | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| **J/61-J/88** | 37 | 80 | 15 | 178 | 159 | 49 | 518 |

## ஊழியப்படை

| யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவு. | மீன் பிடியாளர் | அரச உத்தியோகத்தர் | விவசாயிகள் | வேறு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **J/61-J/88** | 4677 | 2338 | 180 | 15700 | 22895 |

## சமுர்த்திப் பயனாளிகள்.

| யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவு | 1-1500 ரூ | 1501-2500 ரூ | 2501-3500ரூ | மொத்தம் |
|---|---|---|---|---|
| **J/61-J/88** | **1295** | **713** | **2206** | **4214** |



## கைத்தொழில் வர்த்தகம் மற்றும் சேவை

| No | Industries | No of Industries | Employees |
|---|---|---|---|
| 1 | Aluminium Fabrication | 10 | 20 |
| 2 | Bakery | 15 | 60 |
| 3 | Beauty Palace | 42 | 50 |
| 4 | Carpentry | 52 | 108 |
| 5 | Casting Industry | 0 | 0 |
| 6 | Cattle Farm | 25 | 30 |
| 7 | Coir Based Product | 21 | 27 |
| 8 | Communication | 24 | 30 |
| 9 | Computer Shop | 29 | 50 |
| 10 | Construction Work | 17 | 24 |
| 12 | Cycle Repair Work | 47 | 53 |
| 13 | Decorative Item | 8 | 8 |
| 14 | Education Centre | 31 | 150 |
| 15 | Electrical Repairing | 27 | 48 |
| 16 | Fancy shop | 73 | 150 |
| 17 | Food Café | 97 | 354 |
| 18 | Food Processing | 320 | 345 |
| 20 | Garland | 10 | 25 |
| 21 | Grinding Mill | 15 | 28 |
| 22 | Grocery Shop | 323 | 1250 |
| 23 | Handicraft | 45 | 52 |
| 24 | Hard Ware | 33 | 100 |
| 25 | Jewellary | 68 | 100 |
| 26 | Lather Work | 25 | 40 |
| 27 | Laundry | 16 | 28 |
| 28 | Learners | 5 | 14 |
| 29 | Mechanical Work Shop | 35 | 70 |
| 30 | Mesanary | 110 | 240 |
| 31 | Metal Curving | 18 | 24 |

| | | | |
|---|---|---|---|
| 32 | Mixture | 20 | 25 |
| 33 | Motor Bike Repair | 47 | 125 |
| 34 | Phone Shop | 22 | 27 |
| 35 | Picture Palace | 15 | 19 |
| 36 | Poultry Farm | 40 | 45 |
| 37 | Printer | 29 | 40 |
| 38 | Radio, T.V Repairing | 34 | 39 |
| 39 | Rest House | 47 | 140 |
| 40 | Saloon | 36 | 40 |
| 41 | Service Station | 14 | 22 |
| 42 | Tailoring | 120 | 130 |
| 43 | Textile Shop | 92 | 700 |
| 44 | Tyres Work | 6 | 21 |
| 45 | Video | 10 | 30 |
| 46 | Watch Work | 10 | 30 |
| 47 | Welding Work | 25 | 30 |
| **Total** | | **2108** | **4941** |

## மொத்த சில்லறை வியாபாரங்கள்

| Trade | | | Rice Mills | Grinding Mills | Laundry | Saloons | Fancy Shops | Small Industries | Food Shops | Hard wares | Textiles |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Whole Sales | Retails | Food city or Super Market | | | | | | | | | |
| 496 | 1,255 | 4 | 8 | 92 | 70 | 148 | 372 | 220 | 550 | 200 | 568 |

| Jewellery Shops. | Electrical Shops. | Lather work Shops. | Cinema Theatres. | Printing Shops. | Recording & CD Sales | Agriculture Inputs Sales | Fishing inputs Sales Centers. | Medical Shops. | Private Tuition | Arack shops. | Garland shops. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 344 | 176 | 96 | 7 | 116 | 81 | 28 | 36 | 208 | 62 | 12 | 10 |

| Computer Centers. | Tel.communicatio n & Browsing Centers | Telaphone repair shops. | Telephone Shops. | Cycle repair Shops. | Moto bike repair shops. | Light vehicle repair shops. | Heavy vehicle repair shops. | Others. | Total. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30 | 44 | 50 | 72 | 125 | 125 | 95 | 24 | 383 | 6227 |

## கல்வி மட்டம் வயது அடிப்படையில்

| யாழ்ப்பாணப் பிரதேச செயலகப்பிரிவு. | 1-5 ஆண்டு. | 6-11 ஆண்டு. | 12-13 ஆண்டு. | மொத்தம் |
|---|---|---|---|---|
| **J/61-J/88** | 5163 | 9291 | 3025 | 17479 |

## மின்சாரம் உள்ள/ இல்லாத வீடுகளின் எண்ணிக்கை

| யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவு. | ஆம் | இல்லை |
|---|---|---|
| **J/67-J/88** | **16109** | **69** |

## நீர்வசதி உள்ள / இல்லாத வீடுகளின் எண்ணிக்கை

| யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவு. | பொது கிணறு | | மூடப்படாத கிணறு | | குழாய் கிணறு | | பொதுக்கிணறு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | ஆம் |
| | 67 | 1398 | 6596 | 10083 | 685 | 1725 | 915 | 8696 |

## கால் நடை வளர்ப்பு

| யாழ்ப்பாணப்பிரதேச செயலகப் பிரிவு. | மாடுகள் | ஆடுகள் | பறவை இன வளர்ப்புக்கள் (கோழி,வாத்து) | மொத்தம் |
|---|---|---|---|---|
| J/61-J88 | 810 | 1430 | 24355 | 26595 |